2002 மே 3]

ஊராட்சிக்கு உட்பட்ட கங்கமடுகு அணைத் திட்டம், பல ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், கர்நாடக மாநிலம், ஆந்திரா மாநிலத்திலிருந்து வருகின்ற நீர், கிருஷ்ணகிரி அணைக்குச் சென்று, அங்கிருந்து உபரி நீராக 10,000 மில்லியன் கனஅடி நீர், கடலில் சென்று கலக்கின்ற நிலையை மாற்றி, அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு, அந்த அணையின் மூலமாகக் குறைந்தது 2,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் நிலைமையை உண்டாக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சிங்கிரிபள்ளி கிராமத்தின் அருகே நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே ஓர் ஏரி அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.345 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் சிங்கிரிபள்ளி, கங்கமடுகு, பெரிய மணவாரணப்பள்ளி, கொள்ளப்பள்ளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 645 ஏக்கர் நிலங்கள் பயன் அடையும் வாய்ப்பு உள்ளது. எனினும், தல அதிகாரிகளிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு பெறப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 277, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

277—

பெண்கள் கல்லூரி

***1031—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் நகரில், இஸ்லாமியப் பெண்கள் பயன்பெறும் வகையில், அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுமா ?

[2002 மே 3

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடையநல்லூரில் புதிய அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியில், கடையநல்லூர் நகரம், இஸ்லாமிய சமுதாயத்துப் பெண்கள் அதிகமாக வாழக்கூடிய இடம். கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில், கடையநல்லூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொண்டேன். கடையநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் தொகுதி இந்த இரண்டு தொகுதிகளிலும் மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இது உள்ளது. இப்பகுதியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் கல்லூரியில் படிப்பதற்கு, வெளி இடங்களில் தங்கிப் படிப்பதற்கு, முடியாத நிலைமை, வறுமை சூழ்நிலை காரணமாக உள்ளதால், கடையநல்லூரை மையமாகக் கொண்டு அரசு கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நடப்பு ஆண்டில்—என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் எவ்வளவு கட்டச் சொல்லி உத்தரவிட்டாலும் அதை நான் கட்டத் தயாராக இருக்கிறேன்—மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அமைத்துத்தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-10

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி ஆனாலும், உயர் கல்வி ஆனாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு கல்வியினுடைய நிலையை உயர்த்திக் கொண்டு இருப்பது இந்த அரசு ஆகும். பல்வேறு கலைக் கல்லூரிகளும் பொறியியல் கல்லூரிகளும், புரட்சித் தலைவர் ஆட்சியிலும், புரட்சித் தலைவி ஆட்சியிலும் உருவாக்கப்பட்டன. அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப, அரசானது சில கல்லூரிகளைத் தொடங்குகிறது. நிதிப் பற்றாக்குறை

2002 மே 3]

இருப்பதன் காரணமாக, தனியார் சுயநிதிக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு ஆதரவு தருகிறது. அதிலும், சில வழிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு கல்லூரி இருந்தால், அதே இடத்தில் இன்னொரு கல்லூரிக்கு அனுமதி தருவதில்லை. அதுபோல, சில வழிமுறைகளை வகுத்துள்ளோம். கடையநல்லூரில் கல்லூரி தொடங்குவதற்கு இப்போது இந்த ஆண்டு அரசினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து, நிதிப் பிரச்சினையின் காரணமாக தொடங்க முடியாத நிலையில் இருக்கின்றோம். நிதிநிலைமை ஓரளவு சீர்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு பரிசீலனை செய்யும். இல்லாவிட்டால், யாராவது சுயநிதிக் கல்லூரி தொடங்குவதற்கு அந்தப் பகுதியில் முன் வருவார்கள் என்றால், புரட்சித் தலைவி அம்மாவினுடைய அனுமதியைப் பெற்று, அத்தகைய கல்லூரியைத் தொடங்குவதற்கு இந்த அரசு அனுமதிதர பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 278. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

278—

பயிற்சி மையங்கள்

***5343—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவம் மற்றும் பொறியியல் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மையங்கள் நடத்தும் சிலர் அதிக கட்டணம் வசூலிப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) அப்பயிற்சி மையங்களை வரைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவம் மற்றும் பொறியியல் தேர்வுகளுக்கான நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் பல தனியார்கள் நடத்துவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். இதுபற்றி எந்தப்